# கஹவத்த பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கஹவத்த பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

i. பாதீடப்பட்ட தொகையையும் உள்ளபடியான தொகையையும் ஒப்பீடு செய்யும் கூற்று

ii. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய அட்டவணை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் அண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் செலவின விடயங்களுக்குரிய ரூபா 139,251 தொகையான கடப்பாடுகள் 2013 ஆம் ஆண்டின் கடன்கொடுத்தோர் மீதிக்கு எடுக்கப்படாமையின் காரணமாக கடன்கொடுத்தோர் மீதி மற்றும் செலவினங்கள் அதே பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க வங்கியொன்றில் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்ட பணத்திற்காக மீளாய்வாண்டில் யூலை முதல் திசெம்பர் வரை பெறவேண்டிய ரூபா 141,282 தொகையான வட்டிப் பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முத்திரைக் கட்டண பேரேட்டுக் கணக்கில் ஆரம்ப மீதியை விஞ்சி முன்னைய ஆண்டிற்காக பெறப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 1,114,980 தொகை கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பெறுமதிக்காக கடன்பட்டோர் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் மேலதிகமாகப் பெறப்பட்ட முத்திரைக் கட்டண வருமானத்திற்காக சீராக்கங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கடன்பட்டோர் கணக்கு மற்றும் திரண்ட நிதியக் கணக்கு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 சொத்துக் கணக்குகள், 02 பொறுப்புக் கணக்குகள் மற்றும் 07 செலவின விடயங்களுக்கும் உரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் பயன்பாட்டுப் பதிவேட்டின் பிரகாரமும் மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 739,571 தொகை, ரூபா 52,652 தொகை மற்றும் ரூபா 283,384 ஆக வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| 132(ஏ) மற்றும் (ஔ) பிரிவு | அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 2013 பெப்ரவரி 04 சுதந்திர தினத்திற்காக கிரிகெட் போட்டியொன்று ஒழுங்கமைக்கப்பட்டு ரூபா 26,716 தொகையான செலவினமும், கஹவத்த பலங்சூரியகம மரண உதவிச் சங்கத்திற்காக 2013 பெப்ரவரி 12 ஆந் திகதி ரூபா 14,400 பெறுமதியான 18 கதிரைகளின் கொள்வனவுகளையும் உள்ளடக்கி ரூபா 41,116 தொகையான செலவினம் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் - 1992<br>-------------------------------------------<br>நிதிப்பிரமாண இலக்கம் 260, 384(2) மற்றும் 385 | 45 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,864,707 கூட்டுப்பெறுமதியான காசோலைகள் வங்கியின் காசு நிரலில் காசாக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட நிலைமை தொடர்ச்சியாகக் காணப்பட்டமை நிதி மோசடி செய்யப்பட்டது போலவே நிதிக் கட்டுப்பாட்டில் அதிக ஆபத்தொன்று காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |
| (இ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 பெப்ரவரி 19 ஆந் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் டீ.எம்.ஏ/2010(4) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2013 ஆம் ஆண்டிற்காக பிரதேச சபையின் நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களுக்கு சம்பளமாக ரூபா 3,765,074 தொகை பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,199,287 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,545,796 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாடுகளின் மிகை ரூபா 1,346,509 இனால் குறைந்திருந்ததுடன் அது 30 சதவீத குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கு பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பும், ஆதன வரி வருமானங்களின் குறைவும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 2,497 | 2,772 | (275) |
| வாடகை | 5,396 | 3,189 | 2,207 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 691 | 753 | (62) |
| ஏனைய வருமானம் | 4,040 | 4,095 | (55) |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பிடும் போது வாடகை வருமானத்திலும் சேகரிக்கப்பட்ட வருமானத்திலும் முறையே 41 சதவீத குறைவைக் காண்பித்தது.

### 2.3.3 ஆதன வரி

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 04 வருடங்களை விஞ்சிய 838 வாடகையாளர்களிடமிருந்து ரூபா 2,952,644 தொகை அறவிடுவதற்கிருந்ததுடன் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் படி தேவையான முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 கைத்தொழில் வரி, வியாரபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட வரி அறவிடக்கூடிய தொழில் முயற்சிகளை இனங்காணும் வகையில் வருடாந்த மெய்மையாய்வு கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் மேற்கூறப்பட்ட வரிகளுக்குரிய வருமானப் பதிவேடானது நிறுவனத்திற்கு முயற்சிகளின் வகையின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு பேணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய கைத்தொழில் வரி, முயற்சிகள் வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களுக்குரிய ரூபா 118,850 தொகை நிலுவையாக இருந்த 172 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.3.5 ஏக்கர் வரி

நிலுவை ஏக்கர் வரியாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 38 நபர்களுக்கு 01 வருடம் முதல் 04 வருடங்களை விஞ்சிய ரூபா 53,794 தொகை அறவிடுவதற்கிருந்ததுடன் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 கடை வாடகை**

உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி கடைகளை வாடகைக்கு வழங்கும் போது உரிய உடன்படிக்கை வருடாந்தம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் சபைக்குரிய கடைகளை வாடகைக்கு வழங்கும் போது அவ்வாறு வருடாந்தம் உடன்படிக்கை புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடைகளின் வாடகைப் பணம் ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.7 அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் பெனர்கள் பாரியளவில் பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக நிரந்தர மற்றும் தற்காலிக அறிவித்தல் பதாதைப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அறிவித்தல் மற்றும் பெனர் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்குதல் மூலம் உழைக்கப்படுகின்ற வருமானம் தொடர்பாக போதியளவானதும் சரியானதுமான தகவல்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட வருமானத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.8 தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பரிவர்த்தனை கோபுரங்களுக்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படாதிருந்ததுடன் உரிய அனுமதி வழங்குவதற்குரிய முறையான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**2.3.9 ஏனைய வருமானம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒழுங்குமுறையற்ற முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் பல எண்ணிக்கையில் காணப்பட்ட போதும் அதற்காக குறிப்பிட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வசதிகளை வழங்கியதன் பின்னர் உப விதியொன்றை விதித்து வருடாந்தம் அல்லது மாதாந்தம் சபைக்கு வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.10 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 6,005,012 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 4390931 இற்குரிய வங்கிக் கணக்கிணக்கக்கூற்றைத் தயாரிக்கும் போது காசோட்டின் மீதியுடன் வங்கிக் கணக்கின் மீதியை இணக்கஞ் செய்வதற்குப் பதிலாக ஆரம்பத்தில் உள்ளவாறு வங்கி மீதி மற்றும் அந்த மாதத்திற்குரிய பிரதான கணக்கில் ஒவ்வொரு மாதமும் சேருகின்ற பணமாக கிடைக்கின்ற வைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 2013 ஒக்தோபர் மாதம் முதல் செலவினம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கணக்கிற்குரிய பெறுவனவுகள் பிரதான காசேட்டில் பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. 2013 ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை சேருகின்ற பணமாகக் கிடைத்த ரூபா 4,786,667 தொகை ஐந்தொகையில் தற்போதுள்ள வங்கி மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதி காசேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) என்தான பிரதேசத்தில் மக்களின் தண்ணீர் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பிரதேச சபையின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நீர் செயற்திட்டத்திற்குரிய நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை நீர்ப்படியல்களை அறவீடு செய்யும் வகையில் போதியளவான வேலைத்திட்டமொன்று அலுவலகத்தில் காணப்படாதிருந்ததுடன் இந்த நீர் செயற்திட்டத்திற்குரியதாக ஈடுபடுத்தப்பட்ட நீர் மானிகளில் அனேகமானவை பரிசோதனைத் திகதியான 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்றிருந்தது.

(இ) 2012 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் பொருட் பதிவேட்டின் படி சபைக்குச் சொந்தமான 46 - 4075 ஆம் இலக்க உழவு இயந்திரப் பெட்டி பொருள் மெய்மையாய்வுச் சபைகள் மூலம் பௌதீக ரீதியில் இனங்காணப்பட்டிருந்த போதிலும் தற்போது அது சபையிடம் காணப்படாதிருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. அது காணாமல் போனமை தொடர்பாக போதியளவான விளக்கமளித்தல்கள் உரிய தரப்பினரால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மடி கணனியைப் பெற்றுக் கொள்வதற்கான கடன் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2013 ஏப்ரல் 10 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்படாதிருக்கும் போது 2013 ஏப்ரல் மாதம் 06 உறுப்பினர்களுக்காக ரூபா 420,000 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய கடன் தொகை மடி கணனி கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிக்காக தாய்லாந்தில் நடாத்தப்பட்ட 3R கருதுகோள்கள் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக தனிப்பட்ட அழைப்பின் அடிப்படையில் செயலமர்விற்காக 05 தினங்களுக்கு அதாவது 2013 யூன் 07 முதல் 2013 யூன் 11 ஆந் திகதி வரை தனியார் நிறுவனமொன்றிற்கு ஒரு உறுப்பினருக்காக ரூபா 89,000 வீதம் பிரதேச சபையின் 06 உறுப்பினர்களுக்காக ரூபா 534,000 தொகை 2013 யூலை 17 ஆந் திகதி சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் மேற்கூறப்பட்ட செயலமர்விற்காக உறுப்பினர்கள் பங்குபற்றியிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான எல்எப் 7471 ஆம் இலக்க மஹேந்திரா கெப் வண்டி செயற்பாடற்றமையினால் அலுவலகக் கடமைத் தேவைக்காக பிரதம அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் புதிய கெப் வாகனமொன்று மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தும் சபைக்குச் சொந்தமான பழைய கெப் வண்டி செயற்பாடற்றிருந்தமைக்கு பொறியியலாளரின் அறிக்கையொன்று பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த வாகனம் வாடகைக்குப் பெறும் போது அதில் காணப்பட வேண்டிய தரங்கள் இனங்காணப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையின் அடிப்படையில் பகிரங்க கூறுவிலை கோரலின் தேவைக்கு ஈடாகின்ற வாகனமொன்று கொள்வனவு செயற்பாடுகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக மாதாந்த வாடகை ரூபா 70,000 செலுத்தும் அடிப்படையில் எவ்வித உடன்படிக்கையுமின்றி 53-6322 ஆம் இலக்க கெப் வாகனம் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. உரிய வாகனத்திற்காக 2013 ஒக்தோபர் முதல் 2013 திசெம்பர் வரை வாகன வாடகையாக ரூபா 210,000 தொகையும் எரிபொருள் செலவினத்திற்காக ரூபா 190,878 தொகையும் சாரதிக்காக ரூபா 64,756 தொகையும் ஆக மூன்று மாத காலத்திற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 465,634 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபையின் 4 உறுப்பினர்களுக்காக விழா முற்பணமாக ரூபா 64,500 தெகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக எவ்வித அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சுற்றாடல் முகாமைத்துவம்

பல வருட காலம் முதல் எம்பிலிபிட்டி - இரத்தினபுரி பிரதான வீதியின் இருபக்கமும் பாரியளவில் மேற்கொள்ளப்படுகின்ற மீன் வியாபாரத்தின் காரணமாக பிரதான வீதியில் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தது. திடீர் விபத்துக்கள் வீதி நெருக்கடிகளைப் போன்று அதிக துர்வாடையும் பிரதேசத்தில் பரவியிருந்தது. மீன் சந்தைக்கு அருகில் வழிந்தோடுகின்ற கழிவுகள் இந்த இடத்தின் கழிவுப் பொருட்கள் கழுவிச் செல்லப்பட்டு ஒன்றுசேர்வதன் மூலம் சுற்றாடல் மாசுபடுகின்றது. 2007 ஒக்தோபர் 24 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 2010 மே 07 ஆந் திகதிய அரசாங்கத்தின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 261 ஆவது அத்தியாயமான 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (ஏற்றுக்கொள்ளப்பட்ட உபவிதிகள்) அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (i) ஆவது உப பிரிவில் பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் சபைத் தலைவரின் முறையான

பிரகாரம் பெறப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் மீன் வியாபாரம் நடாத்திச் செல்லுதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பாக கருத்தில் கொள்ளாது மேற்கூறப்பட்ட மீன் விற்பனைக் கடைகள் நடாத்திச் செல்லப்படுகின்றன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

35 செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 40,400,500 தொகையானது எவ்வித செலவினத்திலும் ஈடுபடுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்